## சுருக்கம்

விழாக்கள் – "உள்ளாட்சிகள் தின விழா" – ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஆண்டுதோறும் நவம்பர் முதல் நாளன்று "உள்ளாட்சிகள் தின விழா" கொண்டாடுவது தொடர்பாக – ஆணையிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி1) துறை

அரசு ஆணை (ப) எண். 632. நாள்: 26.10.2007

*****

ஆணை:

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மக்களுக்கும் இடையேயான தொடர்புகளை மற்றும் நல்லுறவினை மேம்படுத்துகின்ற வகையிலும் இவற்றின் பணிகளை சம்பந்தப்பட்ட பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்கு தெரிவிக்கும் வகையிலும், "உள்ளாட்சிகள் தின விழா" என்ற ஒரு நிகழ்ச்சியினை தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளிலும், ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 1–ஆம் நாளன்று "உள்ளாட்சிகள் தின விழா" நடத்துவது என்று அரசு ஆணையிடுகிறது.

2. இத்தினத்தன்று, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்த சுவரொட்டிகள், விளம்பர பதாகைகள் நிறுவுதல், நிறைவேற்றப்பட்ட வளர்ச்சிப் பணிகள், தனி நபர்களுக்கு வழங்கப்பட்ட அரசு நலத் திட்ட உதவிகள் ஆகியவற்றின் விவரத்தை பொதுமக்களுக்கு அறிவித்தல், விழிப்புணர்வு பேரணிகள், கருத்தரங்கங்கள், மக்கள் குறை தீர்க்கும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து நடத்துதல், தேசிய மாணவர் சேவை இயக்கம் மற்றும் தன்னார்வ அமைப்புகள் ஒத்துழைப்புடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கட்டிடங்களை சீர்ப்படுத்துதல், வண்ணம் தீட்டல், சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் மாணவ, மாணவியருக்கு உள்ளாட்சி நிர்வாகம் குறித்த பேச்சுப் போட்டி, பொது அறிவுப் போட்டிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து நடத்த வேண்டும்.

3. இத்தகைய நடவடிக்கைகளுக்கு தேவையான செலவினை சம்பந்தப்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகள் தமது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–15.
ஆணையர், நகராட்சி நிர்வாகம், சேப்பாக்கம், சென்னை–5
ஆணையர்,
சென்னை/திருச்சிராப்பள்ளி/மதுரை/திருநெல்வேலி/கோயம்புத்தூர்/சேலம் மாநகராட்சி.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி மையம், மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.
அனைத்து திட்ட அலுவலர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை–9. (அனைத்து பிரிவுகள்).
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
இயக்குநர், உள்ளாட்சி நிதிக்கணக்குகள், சென்னை–15.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
26.10.07